புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • அக்டோபர் 10, 2024 • புரட்சி 24 • முழக்கம் 40 • விலை ரூ.3.00

## ஆதாரங்களுடன் விடுதலை இராசேந்திரன் பேச்சு

# சனாதனத்தை மிரள வைத்த ‘குடிஅரசு’

**குடிஅரசு சமூகத்தில் உருவாக்கிய தாக்கத்தையும், மதவாதிகள் மிரண்டு போய் அரசிடம் பாதுகாப்பு கேட்ட வரலாறுகளையும் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் சுட்டிக்காட்டினார்.**

**சென்னைக் கழகத் தலைமையகத்தில் ஆகஸ்டு 12ஆம் தேதி நடந்த குடிஅரசு நூற்றாண்டு ஆய்வு நூலகத் திறப்பு விழாவில் ஆற்றிய உரையின் சுருக்கம்..**

குடிஅரசும் சுயமரியாதை இயக்கமும் தமிழ்நாட்டின் வரலாற்றில் 1925 முதல் 1949 வரை அதன் எழுத்தையும் பேச்சையும் வரலாறாகப் பதிவு செய்யப்பட்டதன் காரணமாகத்தான் இன்றைக்கும் நாம் அதைப் படிக்கவும் பேசவும் முடிகிறது. பெரியார் குடிஅரசு இதழை ஆரம்பித்த போது வெறும் 7 சதவீதம் பேர் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தனர். அந்தக் காலகட்டத்தில் கூட தந்தை பெரியார் “நான் ஒருவனே எழுதி, நான் ஒருவனே அச்சிட்டு, நான் ஒருவனே எழுதிப் படிக்கின்ற நிலை வந்தாலும் குடிஅரசு இதழை நடத்திக் கொண்டு இருப்பேன்”. நவீன அச்சு இயந்திரங்களோ, தொலை தொடர்பு வசதி என எதுவுமே இல்லாத காலம் அது. 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டில் கூட ‘ஒலிபெருக்கி’ வசதி உண்டு என்று விளம்பரப்படுத்தப்பட்டது. இப்படியொரு காலத்தில் மக்கள் மத்தியில் ஒரு பேரெழுச்சியை உண்டாக்கியது குடிஅரசு.

1925ஆம் ஆண்டு குடிஅரசு இதழ் தொடங்கப்பட்ட நாள் முதல் பல்வேறு அடக்குமுறைகளைச் சந்தித்திருக்கிறது. 1933ஆம் ஆண்டு ‘இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார். அதற்காகப் பிரிட்டிஷ் அரசு பெரியார் மற்றும் அவரது சகோதரி கண்ணம்மாள் மீது இராஜதுவேச வழக்கைப் பதிவு செய்து கைது செய்து ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதித்தது. கோவை சிறையில் பெரியார் அடைக்கப்பட்டார். பெரியார் தங்கையும், பதிப்பாளருமாகிய கண்ணம்மாவுக்கு சிறை தண்டனை; ரூ.2000 ஜாமீன் தொகை கேட்கப்பட்டது. கண்ணம்மாள் ஜாமீன் தொகை கட்டினார். பெரியார் வழக்கம் போல் சிறை சென்றார்.

பெரியார் தனது வாழ்நாளில் எந்த வழக்கிலும் எதிர் வழக்காடியது கிடையாது. நீதிமன்றத்துக்குச் சென்று அவர் சார்பில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டு எந்த தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயார் என்று அறிவித்த ஒரு போராட்டக் குணம் மிக்கத் தலைவர் தான் பெரியார். பார்ப்பன நீதிபதிகள் முன்னாலேயே “பார்ப்பான் நீதிபதிகளாக வாழும் நாடு கடும் புலிகள் வாழும் காடு” நான் புலி வேட்டைக்குப் புறப்பட்டிருக்கிறேன். பார்ப்பன நீதிபதிகள் முன்பே தனது கண்டனத்தைப் பதிவு செய்கிறேன் என்று தெரிவித்திருக்கிறார்.

சிறையில் இருந்து வெளிவந்த பெரியாருக்கு ஈரோட்டில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது அவர் பேசுகையில், குடிஅரசு இதழில் என்னால் எழுதப்பட்ட சாதாரணமானதும் சப்பையானதுமான வியாசத்துக்காகத்தான் நான் சிறைக்குச் செல்ல நேர்ந்ததே தவிர மற்றபடி செய்யத்தக்க ஒரு காரியம் செய்துவிட்டு நான் சிறை செல்லவில்லை. சர்க்கார் பழைய குடிஅரசு இதழ்களின் பழையதைப் புரட்டிப் பார்த்தால் என்னை கடுமையாகக் கண்டிக்கக் கூடியதும், நாடுகடத்தக் கூடியதுமான வியாசங்களை நான் எழுதி இருப்பதை அவர்கள் பார்க்க முடியும். ஆனால் அவர்கள் அந்தக் காலத்தில் இதைக் கவனித்தார்களா என்று தெரியவில்லை. அதற்குக் காரணம் அப்போது சுயமரியாதைக் கொள்கைகள் மக்களிடம் போய்ச் சேரவில்லை. இப்போது இதைக் கண்டிக்கக் காரணம் சுயமரியாதைக் கொள்கையைப் பாமர மக்கள் ஆதரிக்கத் தொடங்கியவுடன் இப்போது என்னைக் கைது செய்ய தொடங்கியிருக்கிறார்கள். என்னைக் கைது செய்யத் தொடங்கியிருப்பது என்பது என்னுடைய கொள்கை மக்களால் கவனிக்கத் தொடங்கிவிட்டது என்பதற்கான வெற்றியாக இதைக் கருதுகிறேன்.

நான் சிறை சென்றதைப் பற்றிப் பேசினார்கள்.



அதைக் கொண்டாடுவதற்கு என்று எதுவும் இல்லை. சிறைக்குச் சென்றுவந்தால் தியாகி என்று பாமர மக்கள் வேண்டுமானால் அறியாமையால் பேசலாம். அறிவுள்ளவர்கள் இதைப் பாராட்டுவதற்கு ஒன்றுமில்லை என்று கூறினார் பெரியார். இப்படிப்பட்ட அடக்குமுறைகளை நீங்கள் பாராட்டி வரவேற்க வேண்டும். இதன் மூலமாகத்தான் என்னுடைய கொள்கைகள் மக்களிடம் கொண்டு போய்ச் சேர முடியும் என்றார்.

1933இல் குடிஅரசு நின்றுவிட்டது. வெளிவந்த கடைசி பத்திரிகையில் பெரியார் இப்படி எழுதினார். இந்தப் பத்திரிகை நின்று போகாது. அடுத்தப் பத்திரிகை உங்கள் கைக்கு வந்து கொண்டிருக்கும் என்று எழுதினார். அடுத்த ஏழே நாட்களில் ‘புரட்சி’ என்ற பெயரில் மற்றொரு பத்திரிகையைத் தொடங்கினார் பெரியார். அப்போது “அடக்குமுறை எங்கிருந்து வருகிறதோ அங்கே புரட்சி தோன்றும்” என்று எழுதினார். ஏழு மாதங்கள் மட்டும் வெளிவந்த புரட்சிக்குப் பின்னர் பகுத்தறிவு என்ற நாளிதழ் வந்தது. அதுவும் 1 1/2 மாதங்களில் நின்றுவிட்டது. அதற்கு பிறகு விடுதலை வந்தது. அப்படி அவர் நடத்திய

> 1925-1930 வரை குடிஅரசின் ஐந்தாண்டு பணிகளை மதிப்பீடு செய்து லண்டனில் உள்ள Rationalist Association என்ற அமைப்பு லிட்டரரி கைடு (Litrary Guide) என்ற பத்திரிகை, தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் ஒரு அதிசயப் புரட்சியை நடத்தியது என்று எழுதியது.

பத்திரிகை ஒவ்வொன்றும் அடக்குமுறைகளைச் சந்தித்தவைகள் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

1930இல் பெரியார் ஈரோட்டில் சுயமரியாதை மாநாட்டை நடத்தினார். அந்த மாநாட்டிற்குத் தலைமையேற்க இந்துமகா சபைத் தலைவர் ஜெயகரை அழைக்கிறார். அவரை எதற்காக அழைத்தார் என்றால் பம்பாய் மாகாணத்தில் தீண்டாமை ஒழிய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியதற்காகப் பெரியார் அவரை அழைத்தார். எதிர் முகாமில் இருந்து பார்ப்பனிய எதிர்ப்பு கருத்துக்கள் வந்தால் அதைப் எப்படி பயன்படுத்த வேண்டும் என்ற பெரியாரின் அணுகுமுறையை இது உணர்த்துகிறது.

1925-1930 வரை குடிஅரசின் ஐந்தாண்டு பணிகளை மதிப்பீடு செய்து லண்டனில் உள்ள Rationalist Association என்ற அமைப்பு லிட்டரரி கைடு (Litrary Guide) என்ற பத்திரிகை, தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் ஒரு அதிசயப் புரட்சியை நடத்தியது என்று எழுதியது. குடிஅரசு தொடங்கிய ஏழு ஆண்டுகளில் குடிஅரசை ஒழித்துக்கட்ட கத்தோலிக்கர்கள் குடிஅரசு ஒழிப்பு நிதி என்ற பெயரில் நிதி திரட்டியிருக்கிறார்கள்.

கத்தோலிக்கக் குருமார்கள், இந்த குடிஅரசு பத்திரிகை எங்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது. எங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசிடம் மனு அளித்தனர். பின்னர் பிரிட்டிஷ் அரசு மதத் தலைவர்களைப் பாதுகாக்கும் சட்டத்தை இயற்ற வேண்டிய நிலை உருவானது. அந்தளவுக்கு சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது பெரியாரின் குடிஅரசு. கத்தோலிக்கர்கள் நடத்திய கத்தோலிக்க லீடர் என்ற ஆங்கிலப் பத்திரிகை குடிஅரசை ஒழிக்க நிதி திரட்டியது.

1933ஆம் ஆண்டு மெயில் பத்திரிகை ஒரு தலையங்கத்தை எழுதுகிறது. இதுவரையில் மதத் தலைவரான நாங்கள் மதத்தைப் பற்றி பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்யலாம். ஆனால் அந்த பாழாய்ப் போன சுயமரியாதை இயக்கமும் குடிஅரசும் வந்த பிறகு தேவாலயங்களுக்கு உள்ளேயும் மத நிறுவனங்களுக்கு உள்ளேயும் தான் நடத்த முடிகிறதே தவிர மக்களிடம் சென்று பிரச்சாரம் செய்யமுடியவில்லை என்று மெயில் பத்திரிகை தலையங்கம் தீட்டியது. இதுதான் சுயமரியாதை இயக்கம் குடிஅரசில் உருவாக்கிய புரட்சி.

பால்ய விவாகம் தடை செய்யப்படுவதற்கு குடிஅரசின் தொண்டு அளப்பரியது. கிருஷ்ணமாச்சாரி என்ற பார்ப்பன எம்.எல்.ஏ பால்ய விவாகத்தில் பார்ப்பனர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் விலக்கு அளிக்க வேண்டுமெனச் சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார். இதைக் கண்டித்து குடிஅரசில் அப்போது கட்டுரை எழுதப்பட்டது.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் திவானாக இருந்தவர் சர்.சிபி.ராமசாமி அய்யர். வாணிப செட்டியார்கள் இழி ஜாதியினர் என்று கூறி அவர்களுக்கு சமஸ்தானக் கோயில்களுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. அதைக் கண்டித்து குடிஅரசு கட்டுரைகளை எழுதியிருக்கிறது. அதே காலகட்டத்தில் பிராமண சபைகள் தமிழ்நாடு முழுவதும் கூட்டங்களை நடத்துகிறார்கள். அதில் நிறைய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்போது குடந்தையில் கூடிய ஒரு கூட்டத்தில் பிராமணர்கள் வர்ணாசிரமத்தைக் கட்டாயமாக ஆதரிக்க வேண்டும். பிராமணர்கள் கடல் கடந்து பயணிக்கக் கூடாது. கடல் கடந்து பயணம் செய்த காந்தி, நேரு, லஜபதி ராய் உள்ளிட்டவர்களை இந்தச் சபை வன்மையாகக் கண்டிக்கிறது. பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பக் கூடாது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவிதாங்கூர் சமஸ்தானம், கடல் தாண்டிப் பயணித்த பார்ப்பனர்களைக் கோயிலுக்குள் அனுமதிக்க முடியாது என்று தீர்மானம் நிறைவேற்றியது. இந்தக் கொடுமைகளை எதிர்த்து அன்று எழுந்த ஒரே எதிர்ப்புக் குரல் சுயமரியாதை இயக்கமும், குடிஅரசும், பெரியாரும் தான்.

பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு என்பது காங்கிரசில் இருக்கும் போதே தொடங்கியது. சமூகத்தில் ஜாதிப் பாகுபாடுகளைக் காட்டாதீர் என்று காங்கிரசில் இருக்கும் போதே தீர்மானம் கொண்டுவந்தார். அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றுக் கூறி இராஜாஜி, இராஜன், வரதாச்சாரி, சந்தானம் உள்ளிட்ட பார்ப்பன முன்னணித் தலைவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்தே விலகிப் போய்விட்டார்கள்.

காங்கிரஸ் கட்சியில் இருக்கும் போது ஜாதிரீதியாக எப்படியெல்லாம் தான் அவமானப்பட்டேன் என்பதைப் பெரியார் குறிப்பிட்டார். திண்டுக்கல், பெரியகுளம் ஆகிய ஊர்களுக்குக் கட்சிக் கூட்டங்களுக்குச் செல்லும் வேளையில் அவருடன் ஒரு அய்யங்கார் வந்தார். அவருக்கு வீட்டிற்குள் வைத்து சாப்பாடு போட்டார்கள், பெரியாருக்கு வெளியில் வைத்துச் சாப்பாடு போட்டார்கள். எச்சில் இலைகளுக்கு அருகில் அமர்ந்து தான் நான் சாப்பிட்டேன் என்று பெரியார் தனக்கு நேர்ந்த அவமானங்களைக் குறிப்பிடுகிறார். தனது அவமானத்தை ஒரு பிரச்சனையாக அவர் மாற்றவில்லை.

ஆனால், காங்கிரஸ் கட்சி நடத்திவந்த சேரன் மாதேவி குருகுலத்தில் ஜாதியப் பாகுபாடு தலைவிரித்தாடிய போது பெரியார் அதற்காகப் போராடினார். தன்னுடைய மான அவமானத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல் சமூகத்தின் மான அவமானங்களைப் பற்றிச் சிந்தித்தத் தலைவராகத்தான் பெரியார் இருந்திருக்கிறார்.

(தொடரும்)

### தலையங்கம்

# மதச்சார்பின்மையா? மனுதர்மமா?

மதச்சார்பின்மை ‘சோசலிசம்’ என்ற சொற்கள் 1976ஆம் ஆண்டு அவசர நிலைக் காலத்தில் தான் அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. அதற்கு முன்பு சட்டத்தில் மதச்சார்பின்மை என்பது இல்லவே இல்லை என்று சங்பரிவாரங்கள் தொடர்ந்து பேசி வருகின்றனர். தமிழ்நாட்டின் ஆர்.எஸ்.எஸ். பரப்புரைச் செயலாளர் போல் செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவியும் அண்மையில் இவ்வாறு பேசியிருக்கிறார். அரசியல் சட்டத்தின் கீழ் உறுதி மொழியேற்று – பதவிக்கு வந்தவர் ஆளுநர். அவர் மதச்சார்பின்மை என்ற சொல்லை நீக்கிவிட வேண்டும் என்று சட்ட மறுப்புப் பேசுகிறார். ‘மதச்சார்பின்மை’ என்ற சொல்லை ஏன் அகற்ற வேண்டும்? அகற்றிவிட்டால் ’இந்துக்கள்’ நாடு என்றாகிவிடுமா? அதாவது அரசியல் சட்டக் குழு மதச்சார்பின்மைக் கொள்கையை ஏற்கவில்லை, அதை இந்திரா காந்தி தான் திணித்தார் என்று இவர்கள் வாதாடுகிறார்கள். அரசியல் சட்டத்தின் அடித்தளமே மதச்சார்பின்மை தான். சட்டத்தின் அடிப்படை உரிமைகளில் மதப் பாகுபாடு கூடாது; ஜாதிப் பாகுபாடு கூடாது; இனப் பாகுபாடு கூடாது என்று தெளிவாகக் கூறுகிறது. இந்தப் பிரிவுகள் நீடிக்கும் வரை இது மதச்சார்பற்ற நாடு தான்; பொது வேலைகளில் பாகுபாடு கூடாது ( பிரிவு 10) தனி மனித மதச் சுதந்திர உரிமை உண்டு ( பிரிவு ) அரசு உதவி பெறும் கல்வி நிலையங்கள் (29(2) வாக்காளர் பட்டியலில் ( பிரிவு 32 ) மதப்பாகுபாடுகள் கூடாது. இவை அரசியல் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்ட உரிமைகள்; ஏதோ, மதச்சார்பின்மை என்ற வார்த்தை இணைக்கப்பட்டதால் மட்டுமே மதச்சார்பற்ற நாடு; இல்லையேல் இந்துக்களின் நாடு என்றே சட்டத்தை உருவாக்கினார்கள் என்பது திரிபுவாதம்; மதச்சார்பின்மை அடிப்படை உரிமைகளிலேயே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. சொல்லப்போனால், அரசியல் சட்டத்தில் ‘ஜனநாயகம்’ என்ற சொல் அது உருவாக்கிய போது இடம்பெறவில்லை. அதனால் இது ஜனநாயக நாடு இல்லை என்றாகிவிடுமா? என்று கேட்கிறோம். ‘ஜனநாயகம் என்று குறிப்பிடப்படாத அரசியல் சட்டத்தில் தான் வாக்குரிமை; தேர்தல் ஆணையம் மற்றும் தேர்தல் பிரதிநிதித்துவ சட்டங்களை அரசியல் சட்டத்தில் இணைத்திருக்கிறது’. திருக்குறளில் தமிழ் என்ற சொல்லே இடம்பெறவில்லை அதற்காக திருக்குறளே தமிழ் இல்லை என்றாகி விடுமா?

‘மதச்சார்பின்மை என்பது அய்ரோப்பாவில் இருந்து இறக்குமதியானது. அரசர்களுக்கும் சர்ச்சுகளுக்கும் நடந்த போராட்டங்களால் உருவான உடன்பாடு தான் மதச்சார்பின்மை’ என்கிறார் ஆளுநர் ரவி. வரலாறு தெரியாமல் பேசுகிறார் ஆளுநர். 1776இல் நடந்த அமெரிக்கப் புரட்சி; 1789இல் நடந்த பிரஞ்சு புரட்சிகளே மதச்சார்பின்மைக்கு வழிவகுத்தது. அங்கு மக்கள் நடத்திய புரட்சியால் சுதந்திரம் – சமத்துவம் – சகோதரத்துவம் என்ற மதச்சார்பின்மையை மய்யம் கொண்ட கோட்பாடுகள் உருப்பெற்றன. எட்டு ஆண்டுகாலப் போராட்டத்திற்குப் பிறகு இங்கிலாந்து அமெரிக்காவைச் சுதந்திர நாடாக அறிவித்தது. தொடர்ந்து 1787-88 இல் உருவாக்கப்பட்ட அரசியல் சாசனத்தில் அரசு தன்னை மதத்தில் இருந்து விடுவித்துக் கொண்டு மதச்சார்பற்ற அரசு (secular state) என்று உலகுக்கு அறிவித்தது. பிரெஞ்சுப் புரட்சியிலும் அதுதான் நடைபெற்றது. புரட்சிக்குப் பிறகு 1789 ஆகஸ்ட் 26 அன்று வெளியிடப்பட்ட ‘மனிதன் மற்றும் குடிமக்களின் பிரகடனம்’ தான் மதச்சார்பின்மையை அறிவித்தது. இந்த வரலாறுகளைப் புரியாமல் உளறுகிறார் ஆளுநர் ரவி. மதச்சார்பின்மை என்ற கருத்தியல் மக்கள் நடத்திய புரட்சியால் உருவானதே தவிர அரசர்களுக்கும் சர்ச்சுகளுக்கும் நடந்த உடன்பாட்டால் அல்ல என்பதை முதலில் உணர வேண்டும்.

மேற்கத்திய சிந்தனைகள் தான் பாரதக் கலாச்சாரத்தைச் சீரழிக்கிறது என்று தொடர்ந்துப் பேசிவருகிறார் ஆளுநர் ரவி. அவர் அணியும் உடையும் குடியிருக்கும் மாளிகையும், அவரது பதவியும் மேற்கத்திய கலாச்சாரம் தான் என்பதை முதலில் உணர வேண்டும். பாரதியக் கலாச்சாரமாக இருந்திருக்கும் என்றால் அவர் புலித்தோல் மீது காவி வேட்டி உடுத்திக் கொண்டு மேல் சட்டை இல்லாமல் பூணூல் உச்சிக்குடுமிகளுடன் ராஜகுருவாக அமர்ந்திருப்பார். சங்கராச்சாரிகளிடம் தான் செங்கோல் இருந்திருக்கும். பள்ளிக்கூடங்கள் இருக்காது, வேத பாட சாலைகள் தான் இருந்திருக்கும். நாடாளுமன்றமும், ஜனநாயகமும், நீதிமன்றங்களும், பள்ளிக்கல்லூரிகளும் மேற்கத்திய ஜனநாயகம் வழங்கியக் கொடை தான்.

டைம்ஸ் ஆஃப் இந்தியா ஆங்கில நாளேடு (அக் 06, 2024) ஆளுநர் கருத்தை மறுத்து ஒரு கட்டுரை வெளியிட்டு இருக்கிறது. ஆளுநரை நோக்கி அந்தக் கட்டுரை சில கேள்விகளை எழுப்புகிறது. மதச்சார்பின்மை பாரத தர்மம் இல்லை என்று கூறும் ஆளுநர் அதற்குப் பதிலாக மனுதர்மம் வர வேண்டும் என்கிறாரா? ஏகலைவன் கட்டை விரலைத் துரோணாச்சாரி குரு தட்சணையாகக் கேட்டதையும், சம்பூகன் தலையை ராமன் வெட்டியதையும் பாரத தர்மம் என்று கூற வருகிறாரா? ‘பிராமணர் உரிமைகளில் பிராமணர் அல்லாதார் குறுக்கிடாமல் இருப்பது தான் தர்மம் என்கிறாரா?’ என்ற அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியுள்ளது. ஆளுநரின் பேச்சுகள் தமிழ்நாட்டையும் தாண்டி அவரது சனாதன முகத்திரையைக் கிழிக்கத் தொடங்கியிருக்கிறது.

அரசியல் சட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் உள்ள ஆளுநர் அந்தச் சட்டத்தையே நான் மதிக்க மாட்டேன் என்று இங்கு பேச முடியும். அவர்கள் மீது சட்டம் பாயாது. சனாதனத்தை எதிர்த்தால் நீதிபதிகளே சனாதனத்தின் வழக்கறிஞர்களாக ஓடிவருகிறார்கள். மதச்சார்பின்மை என்ற கொள்கையைப் படிப்படியாக குழி தோண்டிப் புதைக்க நினைக்கிறது பார்ப்பனியம். வன்மையான கண்டனத்துக்குரியது.

# ஆர்.எஸ்.எஸ் நடத்திய ‘ஆண்கள் பேரணி’



*‘அது என்னப்பா! ஆர்.எஸ்.எஸ் பேரணியில அமைச்சர் முருகன் சீருடையுடன் போஸ் குடுக்குறாரு. தமிழிசையும், வானதியும் காணோமே என்றார் ஒரு நண்பர். ஆமாம் அப்படித்தான். ஆர்.எஸ்.எஸ் அணிவகுப்பை ஊடகங்கள் ஒளிபரப்பின. காக்கி பேண்ட் - குல்லாவுடன் நடந்தார்கள். ஒரு பெண்ணை மருந்துக்குக் கூட காணவில்லை . அது ‘ஆர்.எஸ்.எஸ் ஆண்கள்’ மட்டும் பேரணி. ஏதோ ஒரு சுயம் சேவக்கைப் பிடித்து அவருக்கு பெண் வேடம் போட்டுக்கூட அழைத்து வந்திருக்கலாம். அதற்கும் தயாராக இல்லை.*

*பெண்கள் விண்வெளிக்குப் போகிறார்கள். பல மாதங்கள் சந்திர மண்டலத்தில் எங்களால் வாழ முடியும் என்று சாதனை படைக்கிறார்கள். இராணுவக் கமாண்டர்களாக வருகிறார்கள். குடியரசுத் தலைவராகக் கூட வரலாம், ஆனால் அதே பெண் ஆர்.எஸ். எஸ் உறுப்பினராக மட்டும் முடியாது. சனாதன தர்மம் அப்படி ஒரு இரும்புக் கோட்டை.*

*‘என்னப்பா இது; தமிழிசையும் வானதியும் ஒவ்வொரு நாளும் இந்து தர்மத்துக்காக முழங்குறாங்க, ஆனா அவங்க தாய் அமைப்பு பேரணிக்குள் வராதே என்று தடை போடுது என்று கேட்கக் கூடாது. கேட்டாலும் அப்படி என்ன சொல்லுவார்கள்?*

*’சார், இது நூறு வருச மரபு, நாங்கள் பெண்களை ஆர்.எஸ்.எஸ்-இல் சேர்ப்பது கிடையாது.* **பாரதத் தாயின்** *மீது நாங்கள் சத்தியம் செய்திருக்கிறோம். இந்து தர்மத்துக்கு பெண்கள் தீட்டு. அவர்கள் வேதம் ஓதக்கூடாது. அர்ச்சகராகக் கூடாது. சடங்குகள் புண்ணியக் காரியங்கள் செய்யக்கூடாது. இது அரசியல் கட்சியல்ல; அரசியலில் அவர்கள் வேண்டுமானால் அமைச்சராகட்டும், தலைவராகட்டும், கவர்னர் ஆகட்டும், எங்களுக்கு அது பற்றி கவலையில்லை. எங்கள் தர்மம் பெண்களைத் தீண்டாமைப் பட்டியலில் வைத்திருக்கிறது என்று தான் பதில் கூற வேண்டும். ஆனால் அப்படி வெளிப்படையாகப் பேச மாட்டார்கள். இது ஒரு ‘நிர்வாகப் பிரச்சனை, எங்கள் அமைப்பு பிரச்சனை, நீங்கள் தலையிட வேண்டாம்’ என்று பூசி முழுகி காதில் பூ சுற்றப் பார்ப்பார்கள். ஆனால் உண்மையைத் திரை போட்டு மறைத்துவிட முடியாது. சனாதன தர்மத்தில் தீண்டாமைக்கு இடமில்லை என்று பேசுகிறவர்களுக்கு இதோ பார் பெண்கள் தீண்டாமை என்று நெற்றியில் அடித்து பதில் கூறிவிட்டது ஆர்.எஸ்.எஸ்.*

*காலம் மாறிவருகிறது. ஆர்.எஸ்.எஸ் அமைப்பிலும் மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன.*

**1. தொடக்கத்தில் ஹிட்லரின் ஸ்வஸ்திக் கொடியை ஏற்றினார்கள். பின்னர் அதை கைவிட்டனர்.**

**2. தேசியக் கொடியை ஏற்றவே முடியாது என்ற அடம்பிடித்தார்கள். பிறகு அந்த முடிவை மாற்றிக் கொண்டார்கள்.**

**3. அரைக் கால் சட்டையே எங்கள் சீருடை என்றார்கள். இப்போது முழுக்கால் சட்டையாக அது மாறிவிட்டது.**

**4. சித்பவன் ‘பிராமணர்’ மட்டுமே எங்கள் தலைவர் என்றார்கள். பிறகு இந்து ராஷ்டிரத்தை ஏற்றுக்கொண்ட பிராமணல்லாதாரும் தலைவர் ஆகலாம் என்று கூறினார்கள்.**

**5. கையில் தடியுடன் தான் அணிவகுப்போம் என்றார்கள். நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகு தடியையும் கைவிட்டார்கள்.**

**6. பிரார்த்தனைப் பாடலையும் மாற்றிவிட்டார்கள். ஆனால் பெண்களை சுயம் சேவக்குகளாக மட்டும் அனுமதிக்க மாட்டோம். எவ்வளவு கால மாற்றம் வந்தாலும் இந்தச் சனாதன தர்மத்தில் கைவைக்கவே மாட்டோம் என்று சத்தியம் செய்கிறார்கள்.**

*மோகன் பகவத் கடந்த வாரம் இராஜஸ்தானில் கோட்டாவில் பேசும் போது ஒன்றைக் கூறியிருக்கிறார். இந்து என்ற பெயர் வருவதற்கு முன்பே நாம் வாழ்ந்திருக்கிறோம். நாம் வாழ்ந்ததற்கு பிறகு தான் இந்து என்ற பெயரே நமக்குச் சூட்டப்பட்டது என்று கூறியிருக்கிறார். அதாவது முன்னாள் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ என்பது போல பின்னால் இந்துக்கள் என்கிறார் போலும். இந்து மதத்துக்கு முன்பே சனாதனம் வந்துவிட்டது என்பதாகவே நாம் புரிந்து கொள்ளலாம். அந்தச் சனாதனம் தான் பெண்களைத் தீட்டு என்று ஒதுக்குகிறது. அதே பகவத் மற்றொரு அழைப்பையும் விட்டிருக்கிறார்.*

*மொழி, ஜாதி, பிராந்தியம் எல்லாவற்றையும் களைந்து சனாதன இந்து மதத்தைக் காப்பாற்ற ஆர்.எஸ்.எஸ்-இல் சேருங்கள் என்கிறது அந்த அறைகூவல். இது இந்துமத ஆண்களுக்கு மட்டும் தான்.*

*‘சூத்திர’ தமிழிசைகளே!,‘சூத்திர’ வானதிகளே!‘பிராமண’ நிர்மலாக்களே! சனாதன பெண் புலிகளே! நீங்கள் பேசும் சனாதனத்தில் உங்களின் நிலை என்ன? தீண்டப்படாதவர்கள்.*

**– கோடங்குடி மாரிமுத்து**

# மனிதம் தழைத்தோங்கும் தமிழ்நாடு!

*இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழ்நாட்டில் 2008ஆம் ஆண்டு கலைஞர், மூளைச்சாவு அடைந்தவர்களின் உடலுறுப்பு தானம் பெறும் மகத்தான திட்டத்தினைத் தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாகப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, உடல் உறுப்புகளைத் தானம் செய்பவர்களுக்கு, இறுதி நிகழ்வின்போது அரசு மரியாதை அளிக்கப்படும் என்று கடந்த ஆண்டு செப்டம்பரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இத்தகைய முன்னெடுப்புகளால், தமிழ்நாட்டில் உடல் உறுப்புகள் தானம் செய்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.*

*கடந்த 8 மாதங்களில் 1086 உடல் உறுப்புகள் அரசுக்குத் தானமாகக் கிடைத்துள்ளது. குறிப்பாக முதலமைச்சர் அறிவித்த முதல் 11 மாதத்தில் மட்டும் இதுவரை 192 பேர், உடல் உறுப்புகள் தானம் செய்துள்ளனர். அவர்களிடம் இருந்து சிறுநீரகம், நுரையீரல், இதயம், கல்லீரல், கார்னியா என மொத்தம் 1086 உடல் உறுப்புகள் பெறப்பட்டுள்ளன. இது கடந்த 6 ஆண்டுகளை ஒப்பிடுகையில் சாதனை ஆகும். 2023ஆம் ஆண்டு 178 நபர்களும், 2022ஆம் ஆண்டு 156 நபர்களும், 2021ஆம் ஆண்டு 60 நபர்களும், 2020ஆம் ஆண்டு 55, 2019ஆம் ஆண்டு 127 நபர்களும் உடல் உறுப்பு தானம் செய்துள்ளனர். மேலும் இந்த ஆண்டு உடல் உறுப்பு அளிப்பதாக 6775 நபர்கள் உறுதி அளித்துள்ளனர்.*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தனது உடல் உறுப்புகளைக் கொடையளிக்கப் பதிவு செய்திருப்பதாக, அண்மையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களின் 75வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை, சேலம், கோவை, திருப்பூர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் உடற்கொடை வழங்க முன்வந்து பதிவு செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

## ஒன்றிய ஆட்சியின் ‘மனுதர்மப்’ பார்வை

# அடிமைச் சின்னத்தின் அடையாளமா திருமணம்?

**திருமணமான பெண்களின் விருப்பத்துக்கு மாறாக உச்சநீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது ஒன்றிய ஆட்சி.**

உலகம் முழுக்கவே பெண்ணுரிமை சார்ந்து நடைபெறும் விவாதங்களில் திருமணத்திற்குப் பின்பு கணவனால் பெண்கள் எதிர்கொள்ளும் கட்டாய உறவு முக்கியமான ஒன்று. இத்தகைய வல்லுறவை *Marital Rape* என்று ஆங்கிலத்தில் கூறுகிறார்கள். உலகில் மூன்றில் ஒரு பெண் இத்தகைய கொடுமைக்கு உள்ளாவதாக ஆய்வுகள் கூறுகின்றன. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலேயே சுமார் 14 விழுக்காடு பெண்கள் இக்கொடுமைக்கு உள்ளாகின்றனர். இந்தியாவில் 18 வயது முதல் 49 வயதுக்குட்பட்ட திருமணமான பெண்களில் 82 விழுக்காட்டினர் கணவனால் பாலியல் வன்கொடுமையை எதிர்கொள்வதாக 2019–21ஆம் ஆண்டுக்கான தேசிய குடும்ப நல சுகாதார ஆய்வு கூறுகிறது.

சுமார் 150 நாடுகளில் திருமணத்திற்குப் பிந்தைய கட்டாயப் பாலியல் வன்கொடுமை குற்றமாக்கப்பட்டுள்ளது. எனினும் சட்டத்தையும் மீறி உலகம் முழுவதும் இக்கொடுமையைப் பெண்கள் எதிர்கொண்டே வருகின்றனர்.

32 நாடுகளில் மட்டும்தான் இதனைக் குற்றமாகக் கருதுகிற சட்டம் இல்லை. அதில் இந்தியாவும் ஒன்று. மனைவி 18 வயதுக்குக் குறைவானவராக இல்லாமல் இருந்தால், அவருடன் கணவர் வலுக்கட்டாயமாக உறவு கொள்வது வன்கொடுமையாக எடுத்துக்கொள்ளப்படாது என்பது இந்திய தண்டனைச் சட்டத்தில் பிரிவு 375–இல் அளிக்கப்பட்டிருந்த விலக்கு. இந்தப் பிரிவுக்கு எதிராக மனித உரிமை அமைப்புகள், பெண்ணுரிமைப் போராளிகள் நீண்டகாலமாகக் குரல் எழுப்பி வருகின்றனர். திருமணம் செய்துகொண்டார் என்பதற்காகவே மனைவி கணவனுக்கு அடிமையாகி விட முடியாது. கணவனாக இருந்தாலும் கட்டாய உறவு கொள்வது பாலியல் வன்கொடுமையே ஆகும் என்ற அடிப்படையில் மனித உரிமை அமைப்புகள் குரல் எழுப்புகின்றன.

ஆனால் காதுகொடுத்து கேட்கவே ஒன்றிய அரசு இதுவரை தயாராக இல்லை. பிரிட்டிஷார் காலச் சட்டங்களைத் தூக்கியெறிந்துவிட்டோம் என்று பாரதிய நாகரிக சுரக்சா சன்கிதா, 2024, பாரதிய நியாய சன்கிதா, 2024, மற்றும்

**ர.பிரகாசு**

பாரதிய சாக்சிய ஆதிநியம் 2024 என்ற புதிய குற்றவியல் சட்டங்களை பாஜக அரசு நடைமுறைப்படுத்தியது. ஆனால் அந்தப் புதிய சட்டங்களின் பெயர்கள்தான் மாறியிருக்கிறதே தவிர, கருத்துரிமை பறிப்பைத் தீவிரமாக்கியதைத் தவிர பல சட்டங்கள் அப்படியே இருக்கின்றன. அதில் ஐ.பி.சி. பிரிவு 375–ம் ஒன்று.

அதுமட்டுமின்றி, பிஎன்எஸ் சட்டப் பிரிவு 67–இல், விவாகரத்து பெற்று பிரிந்து வாழும் மனைவியைப் பாலியல் வன்கொடுமை செய்யும் கணவருக்கான சிறைத் தண்டனை 2 முதல் 7 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிக்கு குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வருகிறது. ஆக, ஒன்றிய அரசின் புதிய சட்டம் குடும்ப வன்கொடுமைகளுக்கு விதிவிலக்கு அளிப்பதுடன், திருமணமான

**அதுமட்டுமின்றி, பிஎன்எஸ் சட்டப் பிரிவு 67–இல், விவாகரத்து பெற்று பிரிந்து வாழும் மனைவியைப் பாலியல் வன்கொடுமை செய்யும் கணவருக்கான சிறைத் தண்டனை 2 முதல் 7 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிக்கு குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வருகிறது. ஆக, ஒன்றிய அரசின் புதிய சட்டம் குடும்ப வன்கொடுமைகளுக்கு விதிவிலக்கு அளிப்பதுடன், திருமணமான பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் தவறுகிறது.**

பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் தவறுகிறது. இதனை எதிர்த்து இந்திய மாதர் சங்கம் உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்துள்ளது. அந்த வழக்கில் பதிலளித்துள்ள ஒன்றிய அரசு, “மனைவியுடன் கணவன் விருப்பத்துக்கு மாறாக உறவு கொள்வதை வன்கொடுமையாகக் கருத இயலாது” என்று பதிலளித்திருக்கிறது.

இது பாஜகவின் இந்துத்துவா சிந்தனையில் ஊறிப்போன பழமைவாதத்தைத் தவிர வேறில்லை. “எந்தப் பருவத்தினளாயினும், தனது இல்லத்திலே கூட எந்தப் பெண்ணும் தன்னிச்சைப்படி எச்செயலும் செய்யக்கூடாது. இளமையில் தகப்பன், பருவத்தில் கணவன், விதவையான பின் பிள்ளைகள் தயவில்தான் இருக்க வேண்டும். இழி நடத்தை, பரத்தையர் நட்பு, நற்குணமின்மை இவற்றை உடையவனாயினும் கற்பினளான பெண் தன் கணவனைத் தெய்வமாகப் பேணுக” என்று மனுசாஸ்திரம் (அத்.4, சுலோ.43, 55; அத்.5, சுலோ.147, 148, 154) கூறுகிறது.

கணவன் எத்தகைய கொடுமையை இழைத்தாலும் எதிர்த்துவிடக் கூடாது என்பதுதான் மனுநீதி. அந்த மனுநீதியைச் சட்டமாக்கிடத் துடிக்கும் பாஜக, திருமணமான பெண்ணின் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்கொடுமைக்கு எதிராக ஒருபோதும் இருக்காது. அந்த மனுநீதிப் பற்றைத்தான் உச்சநீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரமாக தாக்கல் செய்திருக்கிறது பாஜக அரசு.

இத்தகைய அநீதிக்கு எதிராகப் பெண்கள் ஏந்த வேண்டிய ஆயுதம் பெரியார். திருமணம்– குடும்ப அமைப்பு முறைகளுக்கு எதிரான பெரியாரின் கருத்துக்கள் இவற்றைத்தான் உணர்த்துகின்றன. 1971ஆம் ஆண்டு சேலம் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில் மனுசாஸ்திரத்திற்கெதிரான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார். பெண்ணின் உடல் கணவனின் சொத்துடைமை அல்ல என்பதையும், பெண்ணுக்கு திருமணத்தை மறுத்து விவாகரத்து பெற உரிமை உண்டு என்பதையும் வலியுறுத்தும் தீர்மானம் அது.

இந்தத் தீர்மானத்திற்கு எதிராக அப்போது பார்ப்பன ஏடுகள் திரிபுவாதம் செய்து கூச்சலிட்டபோது, சட்டப்போராட்டம் நடத்தி வென்றவர் தந்தை பெரியார். பெண்கள் விடுதலைக்கு அத்தகைய வீரியமிக்க கருத்துக்கள்தான் தீர்வு என்பதை இதுபோன்ற வழக்குகள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. மதங்களும் அவை வலியுறுத்தும் பாகுபாடுகள், ஒடுக்குமுறைகள் நிறைந்த கோட்பாடுகளும் காலாவதியாகி ஆகிவரும் இந்தக் காலத்தில், திருமணம் செய்துவிட்டதாலேயே பெண் கணவனுக்கு அடிமை சாசனம் எழுதிக்கொடுத்தவள் என்பது போல வன்கொடுமை செய்யலாம் என்று சட்டத்திலேயே நிறுவப்பட்டிருப்பது மிகுந்த பிற்போக்குத்தனமானது. திருத்தப்பட வேண்டியது.

# நவராத்திரி கொலுவில் இப்படி ஓர் கலகம்

நவராத்திரி கொலுவில் சரசுவதி, லட்சுமி, கிருஷ்ணன், இராமன், சீதை, பிள்ளையார் உள்ளிட்ட கடவுள் பொம்மைகள் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளன. தனது வீட்டுக்கு வந்த நவராத்திரி விருந்தினருக்கு சுண்டல், தயிர் சாதம் வழங்கினார், கோபால அய்யர். இரவு ஓ.டி.டி–யில் நடிகர்கள், கடவுள் வேடமிட்டு நடித்த பக்திப் படம் ஒன்றைப் பார்த்து உறங்கச் சென்றார். கனவில் கொலுவில் இருந்த கடவுள் பொம்மைகளும், உருவங்களாகப் பேசத் தொடங்கின....

கிருஷ்ணன் கீழே இறங்கி வந்து அய்யர் ‘ஆத்து’ சமையலறைக்குப் போகிறான். பாத்திரங்களை உருட்டுகிறான். சத்தம் கேட்ட விநாயகன், கிருஷ்ணனைப் பின் தொடருகிறான்.

**கிருஷ்ணன்** : டேய், யானைத் தலையா! இங்கே, ஏண்டா வந்தே?

**விநாயகன்** : நிறுத்துடா, வெண்ணெய் திருடா; நீ எதையெதை எல்லாம் உருட்டப் போகிறாய், திருடப் போகிறாய் என்பதைப் பார்க்கத்தான் வந்தேன்.

**கிருஷ்ணன்** : நான் திருடினாலும் சரி; குளிக்கும் பெண்களின் ஆடைகளை உருவி மரத்தில் போய் உட்கார்ந்து கொண்டாலும்; நான் எப் போதுமே பக்தர்களுக்கு அன்பான விளையாட்டுப் பிள்ளைதான் தெரியுமா?

**விநாயகன்** : டேய்! இப்போதெல்லாம் ‘ஈவ்டீசிங்’ சட்டம் வந்து விட்டது. உள்ளே பிடித்துப் போட்டு விடுவார்கள், சும்மா துள்ளாதே!

**கிருஷ்ணன்** : அடேய், அழுக்குருண்டைப் பிண்டமே! வரம்பு மீறிப் பேசாதே; ஒவ்வொரு ஆண்டும் உன்னை அடித்துத் துவைத்துக் கடலில் போட்டு, உனது பக்தர்கள் மூழ்கடித்தும் புத்தி வர வில்லையே!

**விநாயகன்** : போதும் நிறுத்துடா! இப்போ அரசியலையே நான் தான் கலக்குறேன் தெரியுமா? எனது பிறந்த நாள் வந்துட்டா, நாடே அமளி துமளிப் படுது. போலீஸ்காரன் வீதிக்கு வீதி துப்பாக்கியோடு திரியறான், தெரியுமா? உன்னை எல்லாம் சீண்டுவாரில்லை.

(விநாயகனும், கிருஷ்ணனும் கூச்சல் போடுகிற சத்தத்தைக் கேட்டு, கொலுவிலிருந்த இராமன், இறங்கி ஓடி வருகிறான்.)

**இராமன்** : என்னப்பா, என்ன பிரச்சினை: இப்படி நமக்குள்ளே சண்டை போட்டுக் கொண்டால் பக்தர்கள் நம்மை மதிப்பார்களா? கடவுள்களாக வந்துவிட்ட பிறகு, ஒழுங்கு வேண்டாமா?

**விநாயகன் ஆத்திரத்துடன்** : அடேய், ராமா! பொண்டாட்டியையே சந்தேகித்தவனே! நீயா, ஒழுங்கு பற்றிப் பேசுகிறாய்.

**இராமன்** : வீணா, என் வம்புக்கு வராதே; எனக்குள்ள செல்வாக்கு உனக்குத் தெரியாது!

**விநாயகன்** : என்னைவிட உனக்கு செல்வாக்கு அதிகமோ? பேத்தாதே!

**இராமன்** : அடேய், நான் தான்டா, இந்த நாட்டுல நீதிமன்றங்களையே ஆட்டிப் படைக்கிறவன். நீதிபதிகளையே என் காலடியில் விழச் செய்து விட்டேனே தெரியுமா?

**விநாயகன்** : இதைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை. வானுலகின் தெய்வமாக இருக்க வேண்டியவன். பூலோகத்துல நீதிமன்றத்துல வந்து வழக்குப் போட்டுகிட்டு நிற்கிறியே; நீ எல்லாம், ஒரு கடவுளா? நீதிமன்றத்திலே உன் பெயரிலேயே மனு போடுகிறானே, உனக்கு அவமானமாக இல்லை?

**இராமன்** : இதிலே என்னடா அவமானம்; நான் எடுத்த எத்தனையோ அவதாரங்களில் இதுவும் ஒன்று.!

**விநாயகன்** : என்ன புடலங்காய் அவதாரம்; உனக்குச் சக்தி இருந்தால் உன் பிறந்த இடத்தை நீயே நேரில் வந்து சொல்லியிருக்கலாமே! பிரசவம் பார்த்த மருத்துவர்கள், மருத்துவச்சிகள் பெயரைக் கூறி இருக்கலாமே! இதற்காக 60 ஆண்டுகள் நீதிமன்றத்தில் வழக்கு நடக்க வேண்டுமா?

**இராமன்** : டேய், பிஸ்கோத்து! தேசத்தையே மீண்டும் ராமராஜ்ய மாக்கியிருக்கிறேன். மனுதர்மத்தை மீண்டும் நீதிமன்ற சட்டமாக்கி விட்டேன்; பாவம்! இந்த முட்டாள் ‘சூத்திரர்’கள்; அவர்கள் நாட்டில் மக்களாட்சி நடப்பதாக நம்பிக் கொண்டு இருக்கிறார்கள். இதெல்லாம் உனக்கு எங்கே புரியப் போகுது!

**கிருஷ்ணன்** : (குறுக்கிட்டு) போதும்; போதும்; நிறுத்துங்கள்! நமக்குள்ளே ஏன் வீண் சண்டை? நமக்குள் ஒற்றுமைதான் மிகவும் முக்கியம். நாம் ஒற்றுமையாக எந்தச் சண்டையும் போடாமல், ‘கல்லாக’ நின்றால் தான் இந்த மக்களைக் காலம் முழுதும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியும். மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டால், நம்ம கதை அம்போ தான். இப்போதே பிளாட்பாரத்தில்கூட இடம் கிடைக்காத நிலை வந்து விடும் போலிருக்கிறது. இப்படிச் சண்டை போட்டுக் கொண்டால் நாட்டிலேயே இடமில்லாது போய்விடும். ஒற்றுமையாக பக்தியைப் பரப்பி மக்களை மடையர்களாக்கி மொட்டை அடிப்போம்; சரிதானா?

**(‘கடவுள்’கள் சமரசம் செய்து கொண்டனர். உறக்கம் கலைந்த கோபால அய்யர், மனைவியிடம், கெட்டக் கெட்ட கனவாக வருதுடி, ஏதோ, ஆபத்து வரும் போலிருக்கே என்று புலம்புகிறார்.)**

– இரா

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# திருப்பூரில் எழுச்சி; கழக சார்பில் பல்வேறு இடங்களில் கொடியேற்றம்



**திருப்பூர் :** தந்தை பெரியாரின் 146வது பிறந்தநாள் விழா திருப்பூர் மாவட்டக் கழக சார்பில் 06.10.2024 அன்று காலை 11 மணி தொடங்கி இரவு 8 மணி வரை முழுநாள் நிகழ்வாக நடைபெற்றது.

வீரபாண்டி பிரிவு, கொளத்துப்பாளையம், இராயபுரம், பெரியார் காலனி, 15-வேலம்பாளையம், அனுப்பர் பாளையம், அம்மாபாளையம், ஆத்துப்பாளையம், மாஸ்கோ நகர் உள்ளிட்ட இடங்களில் திருப்பூர் மாநகர அமைப்பாளர் சரஸ்வதி, தெற்கு பகுதி பொறுப்பாளர் இராமசாமி, மடத்துக்குளம் ஒன்றிய அமைப்பாளர் கடத்தூர் அய்யப்பன், கார்த்தி, மோகன், மதன், சூர்யா, கார்த்திகா ஆகியோர் கழகக் கொடியை ஏற்றி வைத்துச் சிறப்பித்தனர்.

இந்நிகழ்விற்குக் கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி தலைமை தாங்கினார். திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு முன்னிலை வகித்தார்.

இதில் கழக சமூக வலைதளப் பொறுப்பாளர் பரிமளராசன், மாவட்டச் செயலாளர் நீதிராசன், மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, மாநகரத் தலைவர் தனபால், மாநகரச் செயலாளர் மாதவன், மாநகர அமைப்பாளர் முத்து, மாநகரத் துணைத் தலைவர் மாரிமுத்து, கருணாநிதி, தனகோபால், தமிழ்நாடு மாணவர் கழக மகிழவன், தெற்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், தாரை செல்வராசு, பல்லடம் பழனிச்சாமி, ராஜ்குமார், ராஜசிங்கம், விஜய், சிரீஜா, பார்வதி, சுபாஷ், பிரபன்யா, யாழினி, யாழிசை, அஸ்விதா ஆகியோர் பங்கேற்றனர்.

## சரவணக்குமார் எழுதிய இரு நூல்கள் வெளியீடு! கழகப் பொதுச்செயலாளர் வெளியிட்டார்.



சென்னை: எழுத்தாளரும், கழகத் தோழருமான சரவணக்குமார் எழுதிய ‘ஊர் வாயி’, ‘இவர்களும் தெய்வமாக்கப்படலாம்’ என்ற இரண்டு நூல்கள் வெளியீட்டு விழா 06.10.2024 அன்று பெருங்குடியில் உள்ள கழகப் பொதுச் செயலாளரின் இல்லத்தில் நடைபெற்றது..

நூலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் வெளியிட ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி பெற்றுக் கொண்டார். இதில் நூலாசிரியர் சரவணக்குமார், தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், அருள் நாராயணா, கோபிநாத், அன்னூர் விஷ்ணு, அழகிரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## குன்றக்குடி அடிகளார் மற்றும் சேரன் மாதேவி நூற்றாண்டு சிறப்பு வாசகர் வட்டம்

“குன்றக்குடி அடிகளார்” மற்றும் “சேரன் மாதேவி” நூற்றாண்டு சிறப்பு நிமிர்வோம் வாசகர் வட்ட 24வது சந்திப்பு 29.09.2024 அன்று மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

சந்திப்பிற்கு தௌபீக் தலைமை தாங்கினார். மயிலை அஸ்வின் வரவேற்புரையாற்றினார். பொன்மலர் முன்னிலை வகித்தார்.

முதல் நிகழ்வாகத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் படத்தைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்து புகழ் வணக்கம் செலுத்தினார்.

பின்னர் “வைதீக எதிர்ப்பு மரபில் பெரியாரும் குன்றக்குடி அடிகளாரும்!” என்ற தலைப்பில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனும், “பார்ப்பனிய எதிர்ப்புப் புரட்சியில் சேரன்மாதேவி” என்ற தலைப்பில் கழக இளைஞரணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஊடகவியலாளர் ஜெயப்பிரகாசும் சிறப்புரையாற்றினார்கள்.

நிறைவாக நிறை நன்றி கூறினார். வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர் பிரகாசு நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, ஆய்வாளர் பழ.அதியமான் உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# ஆளுநருக்கு எதிராகப் போராட்டம்; சேலத்தில் நடந்த இளைஞர் - மாணவர் கூட்டத்தில் முடிவு!



**சேலம்:** சேலம் மாவட்டக் கழக இளைஞரணி - தமிழ்நாடு மாணவர் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 28.09.2024 அன்று சேலம் தாதகாப்பட்டியில் சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சேலம் மாவட்ட இளைஞரணித் தலைவர் ஏற்காடு தேவபிரகாசு தலைமை தாங்கினார். அமைப்பாளர் வெற்றிமுருகன் முன்னிலை வகித்தார்.

இதில் வருகிற 16.10.2024 அன்று சேலம் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிற்கு வருகை தரும் ஆளுநர் ரவியைக் கண்டித்து சேலத்தில் ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும், பெரியார் நினைவு நாளில் பொதுக்கூட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 51A (h) மூடநம்பிக்கை ஒழிப்பு, பெண்ணுரிமை பாதுகாப்பு ஆகியவற்றை விளக்கி மாணவர்களிடையே விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்துவது எனவும், மாணவர் விடுதிகளில் சந்திப்பு - அறிவியல் கண்காட்சி நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், சேலம் மாநகரத் தலைவர் பாலு, நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, சேலம் மாவட்ட இளைஞரணிச் செயலாளர் பிரபாகரன், அமைப்பாளர்கள் தங்கதுரை, சுசீந்திரன், திவாகர், சிவ சண்முகம், சேலம் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திவ்யா, சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், சேலம் மாநகரப் பொருளாளர் பிரபு, தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர்கள் நாகராஜ், சரிதா, கவியரசு, இளம்பிள்ளை கோபி, சேலம் பரமேஷ், சுதர்சன், யாழினி, நிலா, தமிழ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக சேலம் மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் கவியரசு நன்றி கூறினார்.

### மகளிரணி சந்திப்பு



**மேட்டூர்:** ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழக மகளிரணி சந்திப்பு 06.10.2024 அன்று மேட்டூர் தாய்த் தமிழ்த் தொடக்கப்பள்ளியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேலம் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் சுதா தலைமை தாங்கினார். தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி முன்னிலை வகித்தார். இதில் மகளிரணி அமைப்பாளர் சரசுவதி, சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, காவலாண்டியூர் கலைச்செல்வி, கொளத்தூர் காயத்ரி, அழகேஸ்வரி, தார்க்காடு இனியா, மேட்டூர் கீதா, நங்கவள்ளி கோகிலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மேலும் மகளிரணி சார்பில் மாத சந்தா பெறுவது எனவும், வருடந்தோறும் பெரியார் பிறந்தநாள் - மே தினம் மற்றும் மகளிர் தினத்தில் பள்ளிக் கல்லூரி வளாகங்களில் துண்டறிக்கை வழங்குவது, வருடம் ஒருமுறை சுற்றுலா செல்வது, மகளிர் நலன் சார்ந்து தனி கவனம் செலுத்துவது எனக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

### நங்கவள்ளி

**நங்கவள்ளி:** நங்கவள்ளி ஒன்றியக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 29.09.2024 ஞாயிறு அன்று மாலை 6 மணியளவில் நங்கவள்ளி KMT நகர் பகுதியில் உள்ள நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன் இல்லத்தில் நடைபெற்றது.

நங்கவள்ளி அ.செ.சந்திரசேகரன் தலைமை வகித்தார். வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர் முன்னிலை வகித்தார்.

இதில் அக்டோபரில் பெரியார் 146வது பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. வனவாசி நகரத் தலைவர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : October 10, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran